வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணி

தேதி: 16.08.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச்செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.
- நாடு முழுவதும் இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி கொண்டாடப்பட்டு வருகிறது.
- முன்னாள் பிரதமர், பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாயி-யின் 7ஆவது நினைவு தினத்தை ஒட்டி தலைவர்கள் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.
- புதுச்சேரி சட்டப்பூர்வ பரிமாற்ற தினம், கீழூரில் தேசிய கொடி ஏற்றி கொண்டாடப்பட்டது.

***<u>அம்ரித் உதயான்</u>***

குடியரசு தலைவர் மாளிகையில் உள்ள அம்ரித் உதயான் தோட்டத்தில் புளுமேரியா தோட்டம், ஆலமர தோப்பு, சலசலக்கும் மெல்லிய நீரோடை ஆகியவற்றை பொதுமக்கள் பார்வைக்காக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று திறந்து வைத்தார். ஒலி-ஒளி காட்சிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த தோட்டத்தை பொதுமக்கள் இன்று முதல் அடுத்த மாதம் 14 ஆம் தேதி வரை, திங்கட்கிழமை நீங்கலாக, குடியரசு தலைவர் மாளிகையின் இணையதளமான rashtrapatibhavan.gov.in வாயிலாக விண்ணப்பித்து பார்வையிடலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பிரதமர்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை தொடக்கி வைக்கிறார். புதுடெல்லியில் போக்குவரத்து நெரிசலை தடுக்கும் வகையில் இத்திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இந்த நெடுஞ்சாலை திட்டங்களின் மூலம் டெல்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு இடையேயான இணைப்பு மேம்படுவதுடன் பயண நேரமும் குறையும் என்பது குறிப்பிடத் தக்கது.

## ஜென்மாஷ்டமி

நாடு முழுவதும் இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி கொண்டாடப்படுவதை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடிமக்கள் கிருஷ்ணர் காட்டிய தர்மத்தின் பாதையை பின்பற்றி சமூகத்தையும் நாட்டையும் வலுப்படுத்த வேண்டும் என்று திருமதி முர்மு சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு.நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இந்தப் பண்டிகை மக்களிடையே நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தை ஏற்படுத்தி புதிய ஆற்றலையும் வைராக்கியத்தையும் கொண்டு வரட்டும் என்று கூறியுள்ளார்.

இந்நாளை ஒட்டி மக்கள் தங்கள் இல்லங்களில் கிருஷ்ணர் பாதங்களை வரைந்தும், மலர்களால் அலங்கரித்தும், வெண்ணை, அவல், பொறிகடலை உள்ளிட்டவற்றை படைத்தும் வழிபட்டனர். கிருஷ்ணர் அவதரித்த உத்திரபிரதேச மாநிலம் மதுராவில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயங்கள் வண்ண வண்ண ஒளி அலங்காரங்களுடன் ஒளிர்கின்றன. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இவ்விழாவில் பங்கேற்க மக்கள் அங்கு வருகை புரிந்துள்ளனர்.

## வாஜ்பாய்

முன்னாள் பிரதமர், பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாயி-யின் 7ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. புதுடெல்லியில் ராஜ்காட்டில் அமைந்துள்ள அவரது நினைவிடமான Sadaiv Atal-ல் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், ஜே.பி. நட்டா, திரு.கிரண் ரிஜிஜூ, திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா உள்ளிட்ட பலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

புதுச்சேரியில் வாஜ்பாயின் நினைவு தினத்தை ஒட்டி, கடற்கரைச் சாலையிலுள்ள நகராட்சி மன்றக் கட்டிடத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள், திரு. நமசிவாயம், திரு. லட்சுமி நாராயணன், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

## போர் நிறுத்த பேச்சுவார்த்தை

உக்ரைன்-ரஷ்யா இடையே நடைபெற்று வரும் போரை நிறுத்துவது குறித்த பேச்சுவார்த்தை ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடின் மற்றும் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் இடையே அலாஸ்காவில் 3 மணிநேரம் நடைபெற்றது. எனினும் பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைக்கு பின் செய்தியாளர்களை சந்தித்த திரு. ட்ரம்ப், இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகவும், விரைவில் நல்ல மாற்றம் ஏற்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். இதனிடையே, உக்ரேன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி சமூக வலைதளத்தில் விடுத்துள்ள பதிவில், ரஷ்ய தலைவருடனான சந்திப்பு மற்றும் அவர்களது கலந்துரையாடலின் முக்கிய

அம்சங்கள் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் தமக்கு தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

*__சட்டபரிமாற்ற நாள்__*

பிரெஞ்ச் ஆதிக்கத்தில் இருந்த புதுச்சேரி மாநிலம் கடந்த 1954 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதி விடுதலை பெற்றது. இருப்பினும், 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் தேதி புதுச்சேரி இந்தியாவோடு முறைப்படி இணைந்து, இந்திய அரசியலமைப்பு சட்டத்தை ஏற்றுக் கொண்டது. இந்த நாளை கொண்டாடும் வகையில், புதுச்சேரி இந்தியாவோடு இணைவது குறித்த வாக்கெடுப்பு நடத்தப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்நாள் புதுச்சேரி சட்டப்பூர்வ பரிமாற்ற தினமாக கீழுரில் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, புதுச்சேரி அரசு சார்பில் இன்று நடைபெற்ற விழாவில், சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம் தேசிய கொடி ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

__வாய்ஸ்__

இவ்விழாவில் அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், அரசு கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், தலைமை செயலாளர் திரு சரத்சவுகான், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், காவல் துறை துணை தலைவர் திரு சத்தியசுந்தரம், அரசுஅதிகாரிகள் கலந்துகொண்டு நினைவு தூணில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

*__ஜெய்சங்கர்__*

2 நாள் அரசுமுறை பயணமாக புதுடெல்லி வந்துள்ள தென் கொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. சோ ஹியூன், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடன் செமி கண்டக்டர் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில்

ஒத்துழைப்பு குறித்த இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார். முன்னதாக, ஏப்ரல் மாதம் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு தென்கொரியா கண்டனம் தெரிவித்ததற்காக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தென்கொரிய வெளியுறவு அமைச்சர் திரு சோ ஹியூனுக்கு நன்றி தெரிவித்தார். தொடர்ந்து அந்நாட்டின் தேசிய விடுதலை தினத்தை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இதனிடையே, சீன வெளியுறவு அமைச்சர் திரு வாங் ஹீ வரும் திங்கட்கிழமை முதல் 2 நாள் பயணமாக இந்தியா வருகிறார். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவலின் அழைப்பின் பேரில் இந்தியா வரும் அவர், இந்திய சீன எல்லை பிரச்சனை குறித்த சிறப்பு பிரதிநிதிகளின் 24 ஆவது சுற்று பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். மேலும், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரையும் சந்திக்க உள்ளார்.

*புதுவை சுற்றுலா*

சுதந்திர தினம், ஜென்மாஷ்டமி, வார இறுதி நாட்கள் உள்ளிட்ட தொடர் விடுமுறை காரணமாக புதுச்சேரிக்கு சுற்றுலா பயணிகளின் வருகை வழக்கத்தை விட அதிகரித்து காணப்படுகிறது. முக்கிய சுற்றுலா தலங்களான கடற்கரை சாலை, பாரதிபூங்கா, படகுகுழாம், உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது. மேலும், சுதந்திர தினத்தை முன்னிட்டு புதுச்சேரியில் உள்ள ஆளுநர் மாளிகை, சட்டப்பேரவை வளாகம், தலைமை செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்கள், தலைவர்களின் சிலைகள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு புதுவை விழா கோலம் பூண்டுள்ளது. இதனை ஏராளமான சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் கண்டு ரசித்து புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

வாய்ஸ்

***புதுச்சேரி கலைவிழா***

புதுச்சேரி அரசின் கலை பண்பாட்டு துறை, தஞ்சை தென்னக பண்பாட்டு மையம் இணைந்து நடத்தும் 2025 ஆம் ஆண்டிற்கான புதுச்சேரி கலைவிழா கடற்கரை சாலை காந்தி திடலில் நேற்று தொடங்கியது. இவ்விழாவினை புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், ஆகியோர் முரசு கொட்டி தொடக்கி வைத்தனர். 3 நாட்கள் நடைபெறும் இந்த விழாவில், புதுச்சேரி, தமிழகம், தெலங்கானா, ஒடிசா, மகராஷ்டிரா, அரியானா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த ஆயிரத்து 200 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்கும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். இந்த கலைவிழா முருகம்பாக்கம் திரவுபதியம்மன் கோவில் திடல், நெட்டப்பாக்கம் சிவன் கோவில் திடல், பரிக்கல்பட்டு அரசு நடுநிலைப்பள்ளி மைதானம், காட்டேரிக்குப்பம் திரவுபதியம்மன் கோவில் திடல் உள்ளிட்ட இடங்களிலும் நடைபெறும்.

மேகவெடிப்பு

ஜம்மு காஷ்மீரில் மேக வெடிப்பால் பாதிக்கப்பட்ட சிசோட்டி கிராமத்தில் பெருமளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் குறைந்தது 60 பேர் உயிரிழந்துள்ளதாகவும், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும், மேலும் வீடுகள், கால்நடைகள், கட்டிடங்கள் உள்ளிட்டவை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்ய அம்மாநில முதலமைச்சர் திரு. ஒமர் அப்துல்லா அங்கு சென்றுள்ளார். தேசிய பேரிடர் மீட்பு படை, ராணுவம் மற்றும் மருத்துவக் குழுக்கள் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளன.

முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி, அம்மாநில முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா மற்றும் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலவரங்கள் குறித்து கேட்டறிந்து, தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என உறுதி அளித்தார். மேலும், விரைவான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

***வானிலை***

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வடதமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அடுத்த 2 நாட்கள் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஓரிரு இடங்களில் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த தரைக்காற்று வீசக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்பத்தூர் மாவட்ட மலைப்பகுதிகளில் கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வருகின்ற 18 ஆம் தேதி வடமேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக் கூடும் எனவும் வானிலை மையம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

***விளையாட்டு***

ஆசிய சாம்பியன்ஷிப் துப்பாக்கிச் சுடும் போட்டிகள் கஜகஸ்தானில் இன்று தொடங்கி, வரும் 30ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன. இந்தியா சார்பில் 2 முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற மனுபாக்கர் தலைமையிலான அணியில் 164 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்திய சதுரங்க கிராண்ட் மாஸ்டர் எம். ப்ரணேஷ் சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2025 சேலஞ்சர்ஸ் பட்டத்தை வென்றதன் மூலம் அடுத்த ஆண்டு மாஸ்டர்ஸ் பிரிவில் போட்டியிடும் வாய்ப்பை பெற்றுள்ளார்.